1994 நவம்பர் 4] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1994-95 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1993-94 மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1994–95-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1993–94-ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இந்த மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முன்மொழிகின்றேன். நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக நூல் வடிவமாக மன்றத்திலே வைத்திருக்கிறேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை @ சபைக் குறிப்பிலே ஏற்ற அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்தின் செயல்முறைகளைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், மின்சார வாரியமும் கருத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மின்சார வாரியம் பணிகளை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறிடுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் இறுதியில் என்னுடைய பதில் உரையைத் தெரிவிக்கின்றேன் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் *12–10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி இருக்கையில் இல்லை. பெயர் கொடுத்தவர்கள் இருக்கையில் இல்லாத நிலையில், பேச விருப்பம் தெரிவித்துள்ள உறுப்பினர் திரு. செல்வராஜ்.

@ *131* முதல் *158* வரையுள்ள பக்கங்களில் இணைப்பு-I-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.